

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.2.2024) தலைமைச் செயலகத்தில், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் சந்தித்து, மிக்ஜாம் புயல் நிவாரணப் பணிக்காக தமிழ்நாடு அரசின் போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் சாலை போக்குவரத்து நிறுவனத்தின் பணியாளர்களின் ஒரு நாள் ஊதியத் தொகையான மொத்தம் 14 கோடியே 23 இலட்சத்து 92 ஆயிரத்து 784 ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், போக்குவரத்துக் கழகங்களின் மேலாண்மை இயக்குநர்கள் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (21.2.2024) தலைமைச் செயலகத்தில், வனத் துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் 2023–24ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் இடைக் கால பங்கு ஈவுத் தொகையான 7 கோடியே 60 இலட்சம் ரூபாய்க்கான வங்கி வரைவோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாஹு, தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் தலைவர்/ மேலாண்மை இயக்குநர் திருமதி கருணா பிரியா ஆகியோர் உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞருக்கு 'பாரத ரத்னா' விருது வழங்க வேண்டும்!

# சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூ.5 கோடியாக உயர்த்திடுவீர்!

## சட்டப்பேரவையில் - கழக உறுப்பினர் க.சுந்தர் கோரிக்கை!

**சென்னை, பிப். 23 – சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண் துணை நிதி நிலை அறிக்கை ஆகியவற்றின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய உத்திரமேரூர் தொகுதி கழக உறுப்பினர் க.சுந்தர், முத்தமிழறிஞர் கலைஞருக்கு 'பாரத ரத்னா' விருது வழங்க வேண்டும்'' என ஒன்றிய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.**



**மேலும் அவர் பேசுகையில்,. ''சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூ.5 கோடியாக உயர்த்தி அறிவித்திடுவீர் '' என வேண்டுகோள் விடுத்தார்.**

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது :-

எங்களுடைய ஒப்பற்ற தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், என்னை பேச அழைத்த தங்களுக்கும் நான், என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இளைஞர் நலன், விளையாட்டுத் திறன் எனச் செயல்படும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உள்ளிட்ட இந்த அவையிலே இருக்கின்ற அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பட்ஜெட்டைத் தாக்கல் செய்வதற்கு முன்னதாக, நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள்,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கிறையென்று வைக்கப்படும்"

என்று அழகான திருக்குறளை அற்புதமாக வாசித்தார். ஆக, சபை நடவடிக்கைகளை அவர் தொடங்கிய பிறகு, நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்த நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், 126 நிமிடங்கள் அவருடைய நிதிநிலை அறிக்கையை முழுவதுமாகக் கேட்டபோதுதான், அந்தக் குறள் எப்படி நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குப் பொருந்துகிறது என்று எண்ணி, நாங்களெல்லாம் வியந்து போனோம்.

பெருமைமிகு கலைஞர் நூற்றாண்டில் வியப்பிற்குரிய திராவிட மாடல் ஆட்சியில் நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்திலே கடந்த செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதியில் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தை தொடங்கிவைக்க வருகை தந்த எங்களுடைய முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, அதை விரிவுபடுத்துகின்ற வகையிலே, ஒரு கோடியே 15 இலட்சம் குடும்பங்களுக்கு ரூ.13,720 கோடியை ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். இன்னும், கேளுங்கள் தரப்படும், விடுபட்டுப்போன அந்த மகளிருக்கும் வழங்குவதற்கு நம்முடைய அரசு தயாராக இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நிதியமைச்சர் அவர்கள் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கை பேரறிஞர் அண்ணாவின் அறிவுரைகளைத் தாங்கியதோடு, முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலோடு, சமூக நீதி, கடைக்கோடித் தமிழர் நலன், உலகை வெல்லும் இளைய தமிழகம், அறிவுசார் பொருளாதாரம், மகளிர் நலன் காக்கும் சமத்துவப் பாதை, பசுமை வழிப் பயணம், தாய்த் தமிழும் தமிழர் பண்பாடும் என்ற ஏழு இலக்குகளுடன் சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. இவற்றில் நான் ஒன்றைமட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே 25 ஆண்டுகளுக்கு முன்பு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலே 1999, பிப்ரவரி 8, 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் நடைபெற்ற தமிழ் இணையம்-99 மாநாட்டைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அன்றைக்கு 4-வது முறையாக முதலமைச்சராக இருந்த நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமிழ் மொழியில்-மென்பொருள் வளர்ச்சி, வளர்ச்சி இல்லாத சூழலிலும், மென்பொருள் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் நல்ல முறையில் ஏற்படாததை மாற்றிட நினைத்தார். அதற்காகத் தான் 'தமிழ் இணையம்' அன்றைக்கு அவருடைய தலைமையில் நடத்தப்பட்டது. உலகளவிலே இருந்த அறிஞர்களை வைத்து அன்றைக்கு தமிழ் விசைப்பலகையும், தமிழ்க் குறியீடுகளும் தரப்படுத்தப்பட்டு அறிவிக்கை செய்யப்பட்டது. அந்த மாநாட்டினுடைய அடுத்தடுத்த கட்டமாகத் தான் 2008 ஆம் ஆண்டில் 5-வது முறையாக முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், மாநில தரவு மையத்தையும், தமிழகம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களை இணைக்கும் பெரும் பரப்பு வலையமைப்புத் திட்டத்தையும், அரசு மேல்நிலைப் பள்ளிகளிலே கணினிக் கல்வியும் தொடங்கி, நிர்வாக நேர்த்திக்கும் தமிழ்நாட்டு இளைஞர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கும் கால்கோல் நடத்தி வைத்தார் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

அதன் தொடர்ச்சியாகத் தான், இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 6-வது முறையாக திராவிட முன்னேற்றக் கழகத்தை அரியணையில் அமர்த்தி, பன்னாட்டு கணித்தமிழ்-2024 என்கிற ஒரு அற்புதமான நிகழ்வை கடந்த 15 நாட்களுக்கு முன்பு சென்னையில் நடத்திக் காட்டினார்கள். அதன் மூலமாக *Natural Language Processing tools, Artificial Intelligence, Machine learning, Machine translation, Sentiment Analysis, Large Language models, Automatic Speech Recognition* போன்ற உயர் தொழில் நுட்பங்களை தாய்மொழி தமிழிலே கொண்டு வருவதற்கான வழிவகைகளை, பன்னாட்டு கணித்தமிழ்-2024 என்ற மாநாட்டில் விதைகளாக ஊன்றியிருக்கின்றார்கள்.

இவையெல்லாம் செயல் வடிவம் பெறுவதற்காகத் தான் நிதிநிலை அறிக்கையில் 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இவைகளெல்லாம் செயல் வடிவம் பெறுகின்றபோது, 50 ஆண்டுகளுக்கு முன்பு கலைஞர் அவர்கள் போட்ட விதை, தொடர்ந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் பல்வேறு சாதனைகளை—ஏன் என்று சொன்னால் நிகழ்காலம், எதிர்காலத்தை கலந்து பார்க்கின்றபோது, உலகளவிலே இன்றைக்கு செயற்கை நுண்ணறிவு பரவத் தொடங்கியிருக்கிறது. இன்னும் எதிர்காலத்தில் எந்த அளவிற்கு நிலைமை இருக்கும் என்று சொன்னாலும்கூட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்த முன்னெடுப்பின் காரணமாக மிகச்சிறப்பான முறையிலே தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத்திலே, பல்முனை வளர்ச்சியிலே தமிழை தகவமைக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

'ஏழைகள் இருக்கும் வரை இலவசங்கள் இருக்கும்' என்று முழக்கமிட்டவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள், திராவிட மாடல் ஆட்சி இருக்கும்வரை, மக்கள் நலத் திட்டங்கள் தொடரும் என்று சவாலாக சொல்லியிருக்கின்றார். நெருக்கடிகளைக் கடந்து சாதனைகளைப் புரிந்து வருகின்றார். நம்முடைய நிதிநிலை அறிக்கையில், எதிர்பாராத நெருக்கடிகள், ஒன்றிய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை இவற்றையெல்லாம் கடந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சாதனைகளைச் செய்து வருகிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையில், எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் செல்லூர் கே. ராஜூ நிதிநிலை அறிக்கையில் ஒன்றுமே இல்லை என்று கூறினார். பக்கத்திற்குப் பக்கம் நல்முத்துக்கள், (மேசையைத் தட்டும் ஒலி) கரும்பை நீங்கள் எந்தப் பக்கம் கடித்தாலும் இனிக்கும். நீங்கள் நிதிநிலை அறிக்கையை சரியாகப் படிக்கவில்லை என்று நினைக்கிறேன். இது அற்புதமான ஒரு நிதிநிலை அறிக்கை. நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு பல திட்டங்கள், 'நான் முதல்வன்' 'புதுமைப் பெண்' இவ்வாறு திட்டங்களை சொல்லிக்கொண்டே போகலாம். அந்தத் திட்டங்களைத் தொடர்ந்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே, 'தமிழ்ப் புதல்வன்' (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற ஒரு அற்புதமான திட்டம். அதாவது, பெண் மாணவிகளுக்கு உயர் கல்வியிலே மாதந்தோறும் 1000 ரூபாய் வழங்குகின்ற இந்தத் திட்டம், எங்களுக்கெல்லாம் இல்லையா! என்று ஏக்கப் பெருமூச்சுவிட்ட அந்தக் கல்லூரி மாணவர்களுக்கு 12 மாதங்களும் 3 இலட்சம் மாணவர்களுக்கு 360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இப்போதுதானே பேசுவதற்கு ஆரம்பித்தேன் (சிரிப்பு). இதில் நான் இன்னும் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், எல்லாவற்றையும் சொல்ல முடியாது. 2010 ஆம் ஆண்டில் திருச்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'கலைஞர் வீட்டு வசதித் திட்டம்' என்ற திட்டத்தினை ஆரம்பித்தார்கள். ஆனால், அதன் பின்னர் 2011 ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றத்தினால், 'குடிசைகள் இல்லாமல் தமிழ்நாடு' என்கிற அவருடைய கனவு நிறைவேறாமல் போய்விட்டது. தற்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்த நிதியாண்டில் 1 இலட்சம் வீடுகளுக்கு 3,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 3,50,000 மதிப்புள்ள வீடுகள். இந்தத் திட்டம், எனக்கு எவ்வாறு நினைவுக்கு வருகிறதென்றால், நம்முடைய பெரியார் அவர்கள், அவருடைய நெஞ்சிலே தைத்த முள் .

தந்தை பெரியாரின் எண்ணத்தை நிறைவேற்றுகின்ற வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 'அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம்' என்பதை சட்டமாக போட்டபோது, அது நீதிமன்றத்திற்கு சென்றது. கடைசியில் நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான், 'அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம்' என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆக, தந்தை பெரியார் அவர்களுடைய நெஞ்சில் தைத்த முள்ளையும், தன்னுடைய கனவுத் திட்டம் நிறைவேறாமல் போய்விட்டதே என்ற எண்ணத்தில் மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய நெஞ்சில் தைத்த முள்ளையும் அகற்றிய பெருமை நம்முடைய முதலமைச்சர் அவர்களை சாரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் செஸ் ஒலிம்யாட் போட்டியை அருமையாக நடத்தி நல்ல பெயர் பெற்றார்கள். 6-வது கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளை நடத்தினார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) அதில், இந்தியாவிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெறுகின்ற வகையில் 98 பதக்கங்களைப் பெற்றது என்பதை மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய தொகுதி கோரிக்கைகள் பற்றி சொல்லி விடுகிறேன். உத்தரமேரூரிலுள்ள காவல் நிலையக் கட்டடம் 100 ஆண்டுகளைக் கடந்து, பழுதடைந்த நிலையில், அது சில மாதங்களாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட நீதிமன்றத்திற்கு—அதற்கு ஏற்கெனவே கட்டடம் கட்டுவதற்கான கோப்பு எங்கேயோ நிலுவையில் இருக்கிறது. அதையும் சரி செய்ய வேண்டும். வாலாஜாபாத் தாலுகா தலைமையிடம், அதற்கு உரிமையியல் நீதிமன்றம், தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும். களியபேட்டை பகுதியில் கால்நடை மருந்தகம் அமைத்துத் தர வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, நான் 35 ஆண்டுகாலமாக இந்தக் கோரிக்கையை வைத்து வருகிறேன் என்பது இங்குள்ள மாமன்ற உறுப்பினர்கள் பல பேருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். தமிழ்நாட்டில் 73 ஊராட்சிகளைக் கொண்ட மிகப்பெரிய ஒன்றியமாக உத்தரமேரூர் ஊராட்சி ஒன்றியம் விளங்குகிறது. அதை எல்லோருடைய கனவையும் நிறைவேற்றுகின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த எளியவனுடைய கனவையும் நிறைவேற்ற வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முதலமைச்சர் அவர்கள், வேளாண்மை பட்ஜெட்டில் எண்ணற்ற திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதையும் பாராட்டுவதோடு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என்றும், அவர் பிறந்த ஜூன் 3 ஆம் தேதியை செம்மொழி தமிழ் தினமாக அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதியை 25 இலட்சம் ரூபாய் என ஆரம்பித்து வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். தற்போது எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் தங்களுடைய தொகுதிகளுக்கு தைரியமாக செல்கிறார்கள் என்றால், அதற்கு அடித்தளமிட்டவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை 5 கோடி ரூபாயாக உயர்த்தி, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் கனவுகளை நிறைவேற்ற வேண்டும் என்று பணிவோடு கேட்டு, இந்த சிறப்பான பட்ஜெட்டை வரவேற்று அமைகிறேன்.

இவ்வாறு க.சுந்தர் எம்.எல்.ஏ. பேசினார்.



சென்னை, மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகத்தில், நேற்று முன்தினம் (21.02.2024) முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன் தொடர் போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ள பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தின் கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இந்நிகழ்வின்போது மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அரசு செயலாளர் எஸ்.நாகராஜன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இயக்குநர் திருமதி எம். லக்ஷ்மி, ஆசிரியர் தேர்வு வாரிய தலைவர் திருமதி பி. ஸ்ரீ வெங்கட பிரியா, பள்ளி கல்வி துறை இயக்குநர் முனைவர் ஜி. அறிவொளி மற்றும் மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் தலைவர் சி. சிங்கார வேலன், இணைச் செயலாளர் எஸ்.ரூபன்முத்து, முனைவர். அரங்கராஜா, முனைவர். சிவக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் திருக்களாச்சேரி ஊராட்சியில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் திறந்து வைத்து விவசாயிகளிடம் நெல் கொள்முதலை தொடங்கி வைத்தார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.அப்துலமாலிக், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர் மற்றும் பலர் உள்ளனர்.



நாகை மாவட்டம் தலைஞாயிறு ஒன்றியம் கள்ளிமேடு ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தை நகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் திறந்து வைத்தார். உடன் தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளர் மகா.குமார், தலைஞாயிறு ஒன்றியக் குழு தலைவர் ஆர்.ஜி.தமிழரசி மற்றும் பலர் உள்ளனர்.